

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் ஒண்டிப்புதூரில் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் பெ.மாரிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சாமி, சசிகுமார், கஸ்தூரி அருண், சுரேஷ்குமார் ராஜேந்திரன்,lpf சண்முகம், தி.இளங்கோவன், சதீஷ்குமார் போனஸ்பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# விராலிமலை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மாட்டுவண்டி, குதிரை வண்டி பந்தயம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைக்கின்றனர்!

புதுக்கோட்டை, மார்ச்.23-

கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் விராலிமலையில் இன்று (23 ந் தேதி) மாட்டுவண்டி மற்றும் குதிரைவண்டி பந்தயம் நடைபெறுகிறது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் , சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள் தலைமையில் போட்டிகள் நடைபெறுகிறது. இதில் காலை 6.30 மணிக்கு 8 மைல் பெரிய மாட்டு வண்டி பந்தயம் நடக்கிறது. இதற்கு நுழைவு கட்டணம் ரூ.1200 ஆகும். இதில் வெற்றிபெறும் மாட்டுவண்டிக்கு முதல் பரிசு ரூ.40,072, 2வது பரிசு ரூ.30,072, 3வது பரிசு ரூ.20,072, ஆறுதல் பரிசு ரூ.10,072 வழங்கப்படுகிறது. இதில் முதல் கொடி எடுக்கும் சாரதிக்கு ரூ.2072 சிறப்பு பரிசு வழங்கப்படும்.

காலை 7.30 மணிக்கு 6 மைல் சிறிய மாட்டுவண்டி பந்தயம் நடக்கிறது. இதற்கு நுழைவு கட்டணம் ரூ.600. வெற்றிபெறும் மாட்டு வண்டிக்கு முதல் பரிசு 30,072, 2வது பரிசு 25,072, 3ம் பரிசு. 20,072, ஆறுதல் பரிசு 10,072 வழங்கப்படுகிறது. இதில் முதல் கொடி எடுக்கும் சாரதிக்கு ரூ.1572 சிறப்பு பரிசு வழங்கப்படும். காலை 8 மணிக்கு 6 மைல் சிறிய புதிய குதிரை பந்தயம் நடக்கிறது. இதற்கு நுழைவு கட்டணம் ரூ.500. இதில் முதல் பரிசு ரூ.15,072, 2வது பரிசு ரூ.13,072, 3வது பரிசு ரூ.11,072, ஆறுதல் பரிசு ரூ.10,072 வழங்கப்படுகிறது. இதில் முதல் கொடி எடுக்கும் சாரதிக்கு ரூ.1072 சிறப்பு பரிசு வழங்கப்படும்.

போட்டி மாநில, மாவட்ட சங்க விதிமுறைப்படி நடைபெறும். எந்த பந்தயத் திலும் வெற்றிபெற்ற புது குதிரைக்கு அனுமதி கிடையாது. இருசக்கர வாகனங்களுக்கு அனுமதி கிடையாது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விராலிமலை மத்திய ஒன்றிய தி.மு.க.செயலாளர் கே.பி. அய்யப்பன் செய்துள்ளார்.



ஈரோடு மத்திய மாவட்டம் பெருந்துறை பகுதி இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம், கே.பி.சாமி, பெரியசாமி, பால் சின்னசாமி, சுப்பிரமணியம், ஈஸ்வரமூர்த்தி, பி.செங்கோட்டையன், ராஜா, கங்கா டி.லோகேஸ்வரன், ராகவேந்திரன், பாலசுப்பிரமணியம், சன் சுரேஷ் எம்.எஸ்.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி. வெங்கடாசலம் மற்றும் தேரடி இந்திரகுமார், இரா.அபிநயா டாக்டர் ஆர்.மகேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜே திருவாசகம் ஆகியோர் பேசினார்கள். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.





